## இலங்கை செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரிக்கு செய்யப்படும் வெளிப்படுத்துகை

**செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரிக்கு:**

…………………………………………………. ஆகிய நான்/நாம் (அடிப்படை அட்டை உறுப்பினர்/குறைநிரப்பு அட்டை உறுப்பினர்) ………………………………… இப்படிவத்தில் என்னால்/எம்மால் மேலே தரப்பட்டுள்ள எல்லா விவரங்களும் உண்மையானவையும் சரியானவையுமாகும் என வெளிப்படுத்துகின்(றேன்)(றோம்).

2005 செப்டெம்பர் 19ஆந் திகதிய 1411/5ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட எந்த அறிவித்தலுக்கமைய வெளிநாட்டு செலாவணியில் கொடுக்கல்வாங்கல்களுக்காக அட்டை பயன்படுத்தப்படலாமோ அந்த அறிவித்தலிலுள்ள செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட நியதி நிபந்தனைகளை நான்/நாம் அறிவேன்/அறிவோம் என இத்தால் நான்/நாம் உறுதிப்படுத்துவதுடன் சொல்லப்பட்ட நிபந்தனைகளுக்கமைந்து நடக்கவும் இத்தால் நான்/நாம் பொறுப்பேற்கின்(றேன்)(றோம்).

எனக்கு/எமக்கு வழங்கப்பட்ட அட்டையின்மீது வெளிநாட்டு செலாவணியில் என்னால்/எம்மால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் பற்றி செலாவணிக் கட்டுப்பாட்டுச்சட்டத்தின் நோக்கத்திற்கு நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி தேவைப்படுத்தக்கூடிய ஏதேனும் தகவலை வழங்கவும் நான்/நாம் மேலும் உடன்படுகின்(றேன்)(றோம்).

நான்/நாம் வேறு நாடு சென்றால் அல்லது வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புகளுக்காக நாட்டை விட்டுச் சென்றால் கிறடிட் அட்டையை (அட்டைகளை) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கிக்கு ஒப்படைப்பதனை பொறுப்பேற்கின்(றேன்)(றோம்) என்பதனையும் நான்/நாம் உறுதிப்படுத்துகின்(றேன்)(றோம்).

எனக்கு வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிக் கைமாற்றல் அட்டையின்மீது (EFTC) அதிகாரமளிக்கப்படாத வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல் மேற்கொள்ளப்படுகின்றன என சந்தேகிப்பதற்கு நியாயமான ஏதுக்கள் இருப்பின் இ.நி.கை.அ. (EFTC) மீது வெளிநாட்டு செலாவணி கிடைக்கும் வாய்ப்பை இடைநிறுத்துமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் தேவைப்படுத்தப்படுவார் என்பதனை நான்/நாம் அறி(வேன்)(வோம்).

| | |
|---|---|
| ……………………. | …………………. |
| தி மா ஆ | அடிப்படை அட்டை உறுப்பினரின் கையொப்பம் |

| | |
|---|---|
| ……………………. | …………………. |
| தி மா ஆ | அடிப்படை அட்டை உறுப்பினரின் கையொப்பம் |

## நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பிஎல்சீயின்

## அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் செய்யப்படும் வெளிப்படுத்துகை

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் என்றவகையில் நான் விண்ணப்பகாரரால் (விண்ணப்பகாரர்களால்) வழங்கப்பட்ட தகவலையும் இயைபான ஆவணங்களையும் நான் கவனமாகப் பரிசீலனை செய்துள்ளதுடன் இத்தகவல்களினதும் ஆவணங்களினதும் நல்லெண்ணத்தையிட்டு திருப்திப்பட்டுமுள்ளேன். அட்டை உறுப்பினரால் அவரது அட்டையின்மீது வெளிநாட்டு செலாவணியில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்மீது உரிய விழிப்புக்கவனத்தைப் பிரயோகிக்கவும் பொறுப்பேற்பை மீறி அட்டையின்மீது அதிகாரமளிக்கப்படாத வெளிநாட்டு செலாவணி கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என சந்தேகிப்பதற்கு நியாயமான ஏதுக்கள் இருப்பின் அட்டையின்மீது வெளிநாட்டு செலாவணி கிடைக்கும் வாய்ப்பை இடைநிறுத்துவதற்கும் இவ்விடயத்தை செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கும் நான் பொறுப்பேற்கின்றேன்.

| | |
|---|---|
| ...................... | ...................... |
| தி மா ஆ | வங்கியின் சார்பில் |
| | அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம் |
| | ...................... |
| | அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் |

## வெளிப்படுத்துகை

இந்த உடன்படிக்கை நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீக்கு செய்யப்படுகின்றது: கீழே கையொப்பமிடுவதன்மூலம் எனக்கு/எமக்கு கணக்கொன்று (கணக்குகள்) ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும் நாம் வேண்டுகோள் விடுக்குமாறு எனக்கு/எமக்கு அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கிறடிட் அட்டை(கள்) வழங்கப்பட வேண்டும் எனவும் கிறடிட் அட்டையை (அட்டைகளை) 4 துண்டுகளாக வெட்டி எல்லாத் துண்டுகளையும் தங்களுக்குத் திருப்பிக்கொடுப்பதன்மூலம் அட்டையைப் பயன்படுத்துவதற்கான எனது எமது உரிமையை ஒப்படைக்கும்வரை புதுப்பித்தும் மாற்றீடும் செய்துதருமாறும் நான்/நாம் வேண்டுகோள் விடுக்குமாறு எனக்கு/எமக்கு காலத்துக்குக்காலம் தங்களுக்குத் தேவைப்படக்கூடிய ஏதேனும் தகவலை, எனக்கு/எமக்கு ஆற்றுப்படுத்தாமல் தங்களுக்கு அல்லது தங்களின் பிரதிநிதிகளுக்கு விடுவிப்பதற்கு நான்/நாம் எனது/எமது வங்கியாளர்களுக்கு அல்லது வேறு மூலவளங்களுக்கு அதிகாரமளிக்கின்(றேன்)/(றோம்). எனது/எமது கிறடிட் அட்டை(கள்) நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பிஎல்சீயால் வழங்கப்பட்ட கிறடிட் அட்டை உறுப்பினர் உடன்படிக்கையினதும் ATM மற்றும் வேறு கணக்கு நியதி நிபந்தனைகளுக்கு அமைய மாத்திரமே பயன்படுத்தப்படலாம் என்பதற்கு உடன்படுகின்றேன்(றோம்). அத்துடன் நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பிஎல்சீயால் வழங்கப்பட்ட கிறடிட் அட்டை உறுப்பினர் உடன்படிக்கையின் நியதி நிபந்தனைகளை (அதன் பிரதியொன்று இந்த விண்ணப்பம் அங்கீகரிக்கப்படுவதன்மீது எனது/எமது கிறடிட் அட்டையுடன் எனக்கு/எமக்கு அனுப்பிவைக்கப்படும்) ஏற்றுக்கொள்ளவும் அவற்றால் பிணிக்கப்படவும் மேலும் நான்/நாம் உடன்படுகின்(றேன்)றோம். கிறடிட் அட்டை உறுப்பினர் உடன்படிக்கையிலுள்ள எவையேனும் நியதி நிபந்தனைகளை என்னால்/எம்மால் ஏற்றுக்கொள்ளப்படமுடியாதவையாக இருக்கும்பட்சத்தில் எனக்கு மேற்படி வழங்கப்பட்ட அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கிறடிட் அட்டை(யை)(களை) நான/நாம் பயன்படுத்தமாட்(டேன்)(டோம்) எனவும் மேலே கூறப்பட்டவாறு முறையாக அழித்து திருப்பிக்கொடுப்(பேன்)(போம்) என நான் /நாம் திட்டவட்டமாக உடன்படுகின்றோம். எனது/எமது வேண்டுகோளின்மீது வழங்கப்பட்ட அடிப்படை/பிரதான மற்றும் குறைநிரப்பு/மேலதிக அட்டைகளுக்கான எல்லா அறவீடுகளுக்கும் கூட்டாகவும் தனித்தும் பொறுப்பாளியாக இருப்பதற்கும் நான்/நாம் உடன்படுகின்(றேன்)(றோம்). மேலதிகமாக அதன் குறைநிரப்பு அட்டை உறுப்பினர் அட்டையுடன் சேர்த்து பெறப்பட்ட கிறடிட் அட்டை உறுப்பினர் உடன்படிக்கையின் நிபந்தனைகளினால் பிணிக்கப்படுவார் என்பதுடன் கணக்கிற்கான எல்லா அறவீடுகளுக்கும் பொறுப்புடையவராயுமிருப்பார். கிறடிட் அட்டை(கள்) அத்துடன்/அல்லது குறைநிரப்பு கிறடிட் அட்டைகள் தொடர்பில் வருங்காலத்தில் காலத்துக்குக்காலம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பிஎல்சீ யால் மாற்றப்பட்ட, திருத்தப்பட்ட, மீளாய்வு செய்யப்பட்ட அத்துடன்/அல்லது புதிதாக அறிமுகம் செய்யப்படும் எவையேனும் நியதி நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள இத்தால் உடன்படுகின்(றேன்)(றோம்). அட்டையின் பயன்பாடு அட்டையை ஆளும் எல்லா நியதி நிந்தனைகளையும் ஏற்றுக்கொள்வதற்கான அறிகுறியாகும் என்பதற்கு நான்/நாம் உடன்படுகின்(றேன்)(றோம்). எனது/எமது காசு முற்பண வரையறை எனது/எமது நிரந்தரக் கடன் வரையறையின் 50% வீதத்திற்கு மேற்படமாட்டாது என்பதற்கும் நான்/நாம் உடன்படுகின்(றேன்)(றோம்.

எனது/எமது கிறடிட் அட்டைக் கணக்கிற்கான வைப்பீடுகள் அல்லது கைமாற்றங்கள் அல்லது தற்காலிக வரையறை அதிகரிப்புகள் எனது காசு முற்பண வரையறையை அதிகரிக்கமாட்டாது என்பதனை நான் /நாம் அறி(வேன்)(வோம்). குறித்தசில ATM பொறிகள/வங்கி/கருமபீட மட்டுப்பாடுகள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் எனது/எமது கிறடிட் அட்டையின்(அட்டைகளின்) பயன்பாட்டிற்கு ஏற்புடைத்தாகலாம் என்பதனை நான் /நாம் அறி(வேன்)(வோம்).

நான்/நாம் விரும்பும் முகவரிக்கு ஒப்படைக்க முடியாவிடில் வங்கி எனது கடிதத்தொடர்பு முகவரியை மாற்றலாம் என்பதனை நான்/நாம் அறிவோம். அத்துடன் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் அமைப்புகளுடனுள்ள எனது/எமது தனிப்பட்ட தகவலை சந்தைப்படுத்தும் விடயங்களுக்கும் தொழிற்பாட்டு விடயங்களுக்கும் பயன்படுத்த வங்கிக்கு மேலும் அதிகாரமளிக்கின்(றேன்)(றோம்). இந்த விண்ணப்பத்தில் மேலே தரப்பட்டுள்ள தகவல் உண்மையானதும் சரியானதுமாகும் என இத்தால் நான்/நாம் உத்தரவாதமளிக்கின்(றேன்)(றோம்). கிறடிட் அட்டைகள் வங்கியின் ஏக தற்றுணிபின்பேரில் வழங்கப்படும் என்பதனை நான்/நாம் ஏற்றுக்கொள்கின்(றேன்)(றோம்).

மேற்படி வெளிப்படுத்துகையை நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

| | |
|---|---|
| ………………… | …………………………. |
| தி மா ஆ | முதனிலை அட்டை விண்ணப்பகாரரின் கையொப்பம் |
| ………………… | …………………………. |
| தி மா ஆ | குறைநிரப்பு அட்டை விண்ணப்பகாரரின் கையொப்பம் |